**தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, வணிக முற்பணக் கணக்கு மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமானக் குறியீடுகளுக்குரிய 01 வருமானக் கணக்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.1.1 |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.3 |
| | | 3. | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.1.2 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும். | 1. | இணக்கமின்மைகள் | 2.9 |
| | | 2. | முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.11 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் | 1. | உள்ளக கணக்காய்வு | 2.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.2<br>2.4 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | 1. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.6 |
| | | 2. | வணிக முற்பணக் கணக்குகளில் நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் அறவிடப்படாமை. | 2.7 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

#### 2.1.1 பெறுகையினை திட்டமிடல்

அரசாங்க பெறுகைகள் வழகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டிக்கமைய பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணைக்காக பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

2017 ஆம் ஆண்டின் போது விறகு கொள்வனவிற்காக ரூபா 24,397,730 செலவிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் போது பெறுகையினை மேற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டின் பெறுகைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

05 சிறைச்சாலை நிறுவனங்களுக்கு சொந்தமான 13.0637 ஹெக்டேயார்கள் பரப்பளவான காணி 3 முதல் 7 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் செயற்பாடற்று காணப்பட்டது. மேலும், ரூபா 42,500 கிரயமான மற்றும் ரூபா 217,000 கிரயமான உபகரணங்கள் செயலிழந்து காணப்பட்டன.

### 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

**வருடாந்த பாதீட்டு எல்லையினை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காத வகையில் 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 60 மில்லியனான நிதியேற்பாடு ரூபா 62.34 மில்லியனால் விஞ்சி ரூபா 2.34 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 2.4 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001, 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் சிறைக் கைதிகளின் சம்பளங்களில் 10 சதவீதம் கழிக்கப்பட்டு வெகுமதிகள் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு திறைசேரியின் அனுமதியினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிதிய சேமிப்பு கணக்கொன்று மற்றும் 02 நிலையான வைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மீளப்பெறல்கள் இல்லாதிருந்த இந்தக் கணக்கின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகள் முறையே ரூபா 5,716,858, ரூபா 500,000 மற்றும் ரூபா 700,000 ஆகும். இந்தப் பணம் விளைவற்று வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 2018 ஆம் ஆண்டு ஆண்டு வரை காணப்பட்டது. இந்தக் கணக்கினை ஆரம்பிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக 1995 - 2016 காலப்பகுதியினுள் 9.31 ஹெக்டேயார்கள் பரப்பளவான காணி சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், உத்தேச புதிய நிர்மாணங்கள் 2018 ஒக்தோபர் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 சிறைச்சாலை நிறுவனங்களின் சிறைக் கைதிகளின் தகவல்கள் உள்ளடங்கிய தகவல் முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை நிறுவுவுவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 70.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. வெலிக்கடை சிறைச்சாலையின் பரிசோதனை மட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தகவல் கட்டமைப்பில் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அண்மிக்க முடியாதிருந்தது. 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 23 மற்றும் அதற்குரிய உபகரணங்கள் 29 நிறுவனங்களுக்கு 2017 பெப்ரவரி 14 ஆந் திகதி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், வலையமைப்புக்கு உட்படுத்தல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. இதற்கமைய அவை பயன்படுத்தப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 5,319 | 4,792 | 527 | 10 |
| | மூலதனம் | 3,240 | 2,106 | 1,134 | 35 |
| | **மொத்தம்** | **8,559** | **6,898** | **1,661** | **19** |
| **2017** | மீண்டுவருபவை | 5,275 | 4,762 | 513 | 10 |
| | மூலதனம் | 1,265 | 1,078 | 187 | 15 |
| | **மொத்தம்** | **6,540** | **5,840** | **700** | **11** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பதவியணிக்கான மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கமைய தேவையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்டவாறு பதவியணியை இணைத்துக்கொள்ள முடியாதிருந்தமையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 545 மில்லியன் அதாவது 16 சதவீதமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

03 செலவின விடயங்களுக்காக ரூபா 8 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்ட பின்னரான சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டின் 34 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 180 | 154 | 135 | 135.8 | 400 | 291 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றறிற்கமைய அத்திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,250,001 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதியானது 01 முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்ய தவறியிருந்தது.

**(ஆ) ஏற்பாடுகளுக்கு முரணாக கடன் வழங்குதல்**

2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் செலுத்துதல் ஆகக்கூடிய உரித்தாகிய ரூபா 250,000 இனை மிகைத்து பதுள்ளை சிறைச்சாலையின் 03 உத்தியோகத்தர்களுக்காக இடர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அதன மீதி ரூபா 816,017 ஆகும்.

(இ) கடன் பணத்தை அறவிடும் போது 84 சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் ரூபா 210,527 தொகையான பணம் கூடுதலாக அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 வணிக முற்பணக் கணக்கு

7000/0/0/0232/0002 ஆம் விடய இலக்கமுடைய வணிக முற்பண பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுக்கமைய அதன் நிதி விளைவுகள் பின்வருமாறு ஆகும்.

| **முற்பணக் கணக்கு செயற்பாடு** | **நிதி விளைவுகள்** | | | |
|---|---|---|---|---|
| | **2017** | | **2016** | |
| | **இலாபம் எடுகோள் கட்டணம் நீங்கலாக** | **நட்டம் எடுகோள் கட்டணம் உள்ளடங்கலாக** | **இலாபம் எடுகோள் கட்டணம் நீங்கலாக** | **நட்டம் எடுகோள் கட்டணம் உள்ளடங்கலாக** |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன |
| கைத்தொழில் மற்றும் விவசாய முற்பணக் கணக்கு | 60.425 | 25.025 | 63.07 | 10.34 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான வணிக முற்பணக் கணக்கு தொடர்பில் முனைப்பழியான கணக்காய்வு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், அதற்கு முன்னைய வருடங்கள் தொடர்பிலும், முனைப்பழியான கணக்காய்வு அபிப்பிராயமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மொத்தக் கடன்பட்டோர் மீதியான ரூபா 49,368,410 தொகையினுள் அரச துறைக்குரிய ரூபா 49,332,791 தொகை மற்றும் தனியார் துறைக்குரிய ரூபா 35,618 தொகையான கடன்பட்டோர் மீதிகள் நிலவியது. 10 வருடங்கள்ஞகு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 8,952,285 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட 10 வருடங்களை விட குறைந்த ரூபா 4,123,969 தொகையும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் 5 வருடங்களுக்கு குறைவான ரூபா 23,672,777 தொகையான கடன் மீதியொன்று நிலவியதுடன், கடனை அறவிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கடனை அறவிட முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் 10 சிறைச்சாலை நிறுவனங்களின் 16 வேலைப் பிரிவுகளில் எவ்விதமான உற்பத்தியும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.8 பொது வைப்புக் கணக்கு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் கீழுள்ள 08 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 200.5 மில்லியன் ஆகும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 கணக்குகளுக்குரிய 2 வருடங்களை கடந்த ரூபா 215,634 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறைச்சாலை படிகள் மற்றும் தனியார் காசுக் கணக்கில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 4,282,317 தொகையான மீதியொன்று நிலவியதுடன், அந்தப் பணம் சிறைக்கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 இணக்கமின்மைகள்

### 2.9.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 05 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 215(1) | குருவிட்ட சிறைச்சாலையின் இரு பேரூந்துகளின் பழுதுபார்த்தலை நிறைவு செய்ய முன்னர் இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் பரிசோதனையொன்று மற்றும் உத்தரவாதச் சான்றிதழை பெற்றுக்கொள்ளாது ரூபா 491,890 செலுத்தப்பட்டிருந்தது. |

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் டீஎம்ஏ/2009(i) இன் பிரகாரம் முற்பணக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான, அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக இலங்கை பொலிஸினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 1,817 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 165 | 82 | 83 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 134 | 49 | 85 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 7,154 | 5,532 | 1,622 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 419 | 275 | 144 |
| | **மொத்தம்** | **7,872** | **5,938** | **1934** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றியிருந்தமையால் 112 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததுடன், தகைமையுடைய உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் விசேட தரத்திற்குரிய 17 நிறைவேற்றுப் பதவிகள், பிரதான ஜெயிலர் மற்றும் I தர ஜெயிலர் பெண் பதவிகள் 07 உள்ளடங்கலாக 30 வெற்றிடங்களை நிரப்ப முடியாது போயிருந்தது.

(ஆ) மேற்படி வெற்றிடங்களின் காரணமாக தல்தென சிறைச்சாலையின் விவசாய, தச்சு மற்றும் உருக்கியிணைத்தல் பிரிவுகளின் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையும், பல்லேகல சிறைச்சாலையின் பாதுகாப்பு வேலியொன்று இல்லாதிருந்ததுடன், 28 காவலரண்கள் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேவையான ஊழியர்கள் இல்லதிருந்தமை, தங்கல்ல சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு கைதிகளை கொண்டு செல்லும் போது சிக்கலான நிலமைகள் ஏற்பட்டமையும், பதுள்ளை, குருவிட்ட அலுவலகங்களில் நிறுவன நடவடிக்கைகளை உரிய முறையில் நடாத்திச் செல்ல முடியாமையும் இடம்பெற்றிருந்தது.